18.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 15 ஆண்டுகளுக்குப் பிறகு மதுரையில் கொப்பரை கொள்முதல்: விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுமா?

மதுரை மாவட்டத்தில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு கொப்பரை கொள்முதல் நிலையங்கள் தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளன. இதுகுறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

தென்னை விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கொப்பரை கொள்முதல் நிலையங்கள் அரசால் தொடங்கப்பட்டுள்ளன. இங்கு கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொப்பரை கொள்முதல் செய்யப்படும்.

தென்னை விவசாயிகள் தாங்கள் சார்ந்துள்ள வட்டார வேளாண் அலுவலர்களிடம் சான்றிதழ் பெற்று, கொள்முதல் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் எத்தனை ஏக்கரில் தென்னை விவசாயம் செய்கிறார், மகசூல் உள்ளிட்ட விவரங்கள் வேளாண் துறையினரால் சான்றளிக்கப்படும். விவசாயிகளின் பெயரில் இடைத்தரகர்கள் அல்லது வியாபாரிகள் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதைத் தடுப்பதற்காக இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் சோழவந்தான், வாடிப்பட்டி, மேலூர் ஆகிய இடங்களில் கொப்பரை கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அரவைக் கொப்பரை கிலோ ரூ.59.50 எனவும், பந்து கொப்பரை கிலோ ரூ.62.40 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூன்

15 முதல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டாலும், இன்னும் கொள்முதல் தொடங்கவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நேரடி கொப்பரை கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதால், இப்போது தான் இம் மையங்களில் இருந்து விவசாயிகள் விண்ணப்பங்கள் பெற்றுச் செல்கின்றனர். வேளாண் துறையிடம் பெறப்பட்ட சான்று சமர்ப்பித்த உடன், விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். அதைத் தொடர்ந்து கொப்பரை கொள்முதல் செய்யப்படும் என்று கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறினர்.

மதுரை மாவட்டத்தில் 36 ஆயிரம் ஏக்கரில் தென்னை விவசாயம் செய்யப்படுகிறது. தென்னை விவசாயிகளைப் பொருத்தவரை கொப்பரை தயார் செய்வதைக் காட்டிலும், தேங்காயாக விற்பனை செய்வதையே விரும்புகின்றனர்.

கடைசியாக 2000-2001 இல் கொப்பரை கொள்முதல் நிலையம் செயல்பட்டது. அதன் பிறகு தமிழக அரசு கொப்பரைக்கான விலையை உயர்த்தி அறிவித்துள்ள நிலையில் இப்போது நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தேங்காயை விட கொப்பரையாக விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் லாபம் ஈட்டலாம். இருப்பினும் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. ஆகவே, கொப்பரை கொள்முதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தரம் பிரிப்பது, உலர வைப்பது போன்றவற்றில் பயிற்சியும் தேவையாக உள்ளது என்று வேளாண் வணிகத் துறையினர் கூறுகின்றனர்.

மதுரை குலமங்கலம் பகுதியைச் சேர்ந்த விவசாயி திருப்பதி கூறுகையில், நெல், கரும்பு, கொப்பரை உள்ளிட்ட எந்தவொரு விளைபொருளாக இருந்தாலும் அரசு நிர்ணயிக்கும் ஆதரவு விலை என்பது கட்டுபடியாகாத நிலையில் தான் இருக்கிறது.

தேங்காயைப் பொருத்தவரை 25 ஆண்டுகளுக்கு முன்பு என்ன விலை கிடைத்ததோ, அதே விலை தான் இப்போதும் இருக்கிறது. விலை நிர்ணயம் செய்யும்போது விவசாய பிரதிநிதிகளையும் ஆலோசித்து

கட்டுபடியான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## ரூ.53 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம்

அரச்சலூர் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் ரூ. 53 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த ஏலத்தில், அரச்சலூர் சுற்று வட்டார பகுதி விவசாயிகள் 8 ஆயிரத்து 975 தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் அதிக விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 14 ஆயிரத்து 709-க்கும், குறைந்த விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 12 ஆயிரத்து 890-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 53 ஆயிரத்து 780-க்கு ஏலம் நடைபெற்றது.

தேங்காய் ஒன்றுக்கு ரூ. 4.26 முதல் ரூ. 6.00 வரை ஏலம் நடைபெற்றது.

### கூடலூர் பகுதியில் தென்மேற்குப் பருவ மழை தீவிரம்

கூடலூர் பகுதியில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்து வருகிறது.

தென்மேற்குப் பருவ மழை தொடங்கியுள்ள நிலையில் கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதியில் தொடர்ந்து இரண்டாவது நாளாக மழை பெய்து வருகிறது.

அவ்வப்போது கருமேகங்கள் திரண்டு எந்நேரமும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது.

தொடர்ந்து, கூடலூர் மற்றும் பந்தலூர் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

வேறு எந்த வருடமும் இல்லாத அளவுக்கு கோடை வெயில் கடுமையாக இருந்தத காரணத்தால் வறண்டு கிடந்த வனப் பகுதி தற்போது பசுமையுடன் காட்சியளிக்கிறது.

## சேலத்தில் இடியுடன் பலத்த மழை

சேலத்தில் வெள்ளிக்கிழமை மாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

சேலத்தில் நிகழாண்டில் கோடை காலத்தில் கடும் வெயில் தாக்கம் இருந்தது. இந்த வெயில் மே மாதம் வரை இருந்தது. வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக ஜூன் முதல் வாரத்தில் மழை பெய்தது.

இதனிடையே மீண்டும் கோடை வெயிலின் தாக்கம் நீடித்தது. இந்தநிலையில் வெள்ளிக்கிழமை மாலை கருமேகங்கள் திரண்டது. பின்னர் திடீரென மாலை நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

இடியுடன் பெய்த பலத்த மழையால் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல ஓடியது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் தற்போது மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதால் அவ்வழியே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

புதை சாக்கடைக்காகத் தோண்டப்பட்ட சாலைகள் சீரமைக்கப்படாமல் உள்ளதால் குண்டும், குழியுமாக உள்ளன. தற்போது மழை பெய்துள்ளதால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமத்துக்கு ஆளாகினர்.

மழை பெய்யத் தொடங்கியதும் நகரில் பல இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

**உழவர் சந்தைகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வலியுறுத்தல்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென வேளாண் வணிகத் துறை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) சிங்காரம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் தங்களுக்கு அருகாமையிலுள்ள உழவர் சந்தைக்குச் சென்று நிர்வாக அலுவலர், உதவி நிர்வாக அலுவலரிடம் தங்கள் நிலத்தில் விளைவிக்கக்கூடிய காய்கறிகளை உழவர்சந்தையில் விற்பதற்கு தேவையான நடைமுறை விவரங்களை தெரிந்து கொள்ளலாம். விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா, அடங்கல் பெற்று வேளாண் துணை இயக்குநரிடம் (வேளாண் வணிகம்) உழவர்சந்தையில் காய்கறிகள் விற்க அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

இதைத்தொடர்ந்து விண்ணப்பம் பரிசீலிக்கப்ட்டு அடையாள அட்டை வழங்கப்படும். அடையாள அட்டையைப் பயன்படுத்தி உழவர் சந்தையில் காய்கறிகள் விற்பனை செய்யலாம்.

விவசாயிகள் உழவர் சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்வதன் மூலம் இடைத்தரகர்கள் இன்றி வெளிச்சந்தை விலையை விடக் கூடுதல் லாபம் பெற முடியும்.

எனவே கந்தர்வகோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி, கறம்பக்குடி மற்றும் விராலிமலை ஆகிய இடங்களில் செயல்படும் உழவர்சந்தைகளை விவசாயிகள் பயன்படுத்தி தங்கள் நிலத்தில் விளையக்கூடிய காய்கறிகளை அங்கு விற்பனை செய்து தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம்.

## குறுவை தொகுப்புத் திட்டம்: வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

பட்டுக்கோட்டை வட்டாரத்தில் குறுவை தொகுப்புத் திட்டம் செயலாக்கப்படுவது குறித்து பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தஞ்சாவூர் வேளாண் இணை இயக்குநர் (பொ) எஸ். சீனிவாசன் அண்மையில் ஆய்வு மேற்கொண்டார்.

வேளாண் உதவி அலுவலர்களிடம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் சாதனை விவரங்களை கேட்டறிந்தார். அப்போது அவரவர் இலக்கின்படி திட்டப் பணிகளுக்கு விவசாயிகளை தேர்வு செய்து விரைந்து பணிகளை முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும், குறுவை சாகுபடி செய்த 8 விவசாயிகளுக்கு விலையில்லா இடுபொருள்களான நெல் நுண்ணூட்டம் ஏக்கருக்கு 5 கிலோ வீதம் வேளாண் இணை இயக்குநர் சீனிவாசன், வேளாண் துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்) சொக்கலிங்கம் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்ச்சியில் பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் (பொ) சா. வெங்கடாசலம், வேளாண் அலுவலர் சு. தாரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பசுந்தாள் உர விதை விதைத்தல் பணி ஆய்வு

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அருகேயுள்ள கோபாலசமுத்திரம் பகுதியில் தமிழக முதலமைச்சரின் குறுவை தொகுப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ், விலையில்லா உழவு செய்து பசுந்தாள் உர விதை விதைத்தல் பணியை மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, தமிழக முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிவித்த ரூ. 1.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க வளாக கட்ட கட்டுமானப் பணியை ஆய்வு செய்தார்.

பின்னர் ஆட்சியர் எம். மதிவாணன் கூறியது: வெண்ணாறு பகுதியில் நிலத்தடி நீர் பாதிப்பால் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள இயலாத

சூழ்நிலை உள்ளது. இதனால், விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவிடும் வகையில் மண்ணின் ஈரப்பதத்தைக் கொண்டு உழவு செய்து, பசுந்தாள் உரப் பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய ஏதுவாக வேளாண் பொறியியல் துறை, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம், தனியார் டிராக்டர்கள் கொண்டு உழவு செய்யும் விவசாயிகளுக்கு, உழவு மானியமாக ஏக்கருக்கு ரூ. 500-ம் பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்யத் தேவையான விதைகள் இலவசமாகவும் வழங்கப்படும்.

காவிரி பகுதியில் குறுகிய கால பயறு வகை விதைகள் 100 சதவீத மானியத்திலும் உழவு மானியமாக ஏக்கருக்கு ரூ. 500-ம் வழங்கப்படும்.

மேலும், வேளாண் பொறியியல் துறை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், தனியார் இயந்திரங்கள் மூலம் விலையில்லாமல் இயந்திர நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்காக திருவாரூர் மாவட்டத்துக்கு 38,000 ஏக்கர் பரப்பில் நடவுப் பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எச்.பி.டி.இ. பைப்புகள் 250 யூனிட் வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

விவசாயி தொழில்நுட்ப சேவைகள் ஒரே இடத்தில் கிடைக்க ஏதுவாக வேளாண்மைத் துறையில் வட்டார அளவில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்க தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிப்பு வெளியிட்டார். அதன்படி, திருவாரூர் மாவட்டத்தில் 9 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்க தலா ரூ. 1.50 கோடி வீதம் ரூ. 13.50 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டடத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, பொறியியல் துறை அலுவலர்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, விவசாயிகள் பயிற்சி பெறுவதற்கான அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகணன், உதவி இயக்குநர் (வேளாண்மை) சிவக்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, முத்துப்பேட்டை ஒன்றியக்குழுத்

தலைவர் ஆர்.கே.பி. நடராஜன் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## சென்னை வடக்கு மண்டலத்துக்கு 1,000 டன் நெல்

நீடாமங்கலத்திலிருந்து சென்னை வடக்கு மண்டலத்துக்கு 1,000 டன் சன்னரக நெல் அரவைக்காக சரக்கு ரயிலில் வெள்ளிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றிலிருந்து 75 லாரிகளில் 1,000 டன் எடையுள்ள சன்னரக நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை கொண்டுவரப்பட்டது. நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில், சுமைதூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் அடுக்கினர்.

இதைத்தொடர்ந்து, நெல் மூட்டைகள் சென்னை வடக்கு மண்டலத்துக்கு அரவைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

## குறுவை நெல் நடவுப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு

திருவாரூர் மாவட்டம், கொல்லுமாங்குடி ஊராட்சியில் குறுவை நெல் நடவுப் பணிகளை ஆட்சியர் எம். மதிவாணன் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கொல்லுமாங்குடி ஊராட்சியில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்து ஆட்சியர் பேசியது:

குறுவை நெல் நடவுப் பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்ளவும், பயிர் எண்ணிக்கையை பராமரித்து குறைந்த நீரில் அதிக பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி மகசூலை உயர்த்தவும், நடவுப் பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தவும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனியார் வேளாண் பொறியியல் துறை மூலம் நடவு இயந்திரங்கள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இயந்திர முறையில் நாற்று தயாரிப்பு மற்றும் நடவுக்கான செலவினம் 100 சதவீத மானியமாக ஏக்கருக்கு 4,000 வீதம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. குறுவை சாகுபடியில் மகசூலை உயர்த்த

நெல் நுண்ணூட்டக் கலவை மற்றும் சிங்சல்பேட் ஆகியவை 100 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நிலத்தடி நீர் சிக்கனத்தை ஊக்கப்படுத்த எச்டிபி குழாய்கள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. அதன்படி, மாவட்டத்துக்கு 38,000 ஏக்கரில் நடவுப் பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 3,379 ஏக்கர் இயந்திர முறையில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள இயந்திர நெல் நடவுக்காக பாய் நாற்று தயார் செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது என்றார் மதிவாணன். ஆய்வின்போது, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இயற்கை வேளாண்மைக்கு 10 மாவட்டங்கள் தேர்வு

காஞ்சிபுரம்:காஞ்சிபுரத்தில், ஐந்து மாநில வேளாண்மை துறை அதிகாரிகள் பங்கேற்ற, இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களின் வேளாண் துறை அதிகாரிகளுடன், தமிழக அதிகாரிகளும் பங்கேற்ற, இயற்கை வேளாண்மை கூட்டத்தை, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி துவக்கி வைத்தார். இதில், மத்திய வேளாண் துறை இணை செயலர் ராணி குமுதினி, மத்திய வேளாண் துணை ஆணையர் சைலேந்திர சிங், மத்திய வேளாண் துணை ஆணையர் ஆனந்தகுமார்

உட்பட பலர் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விவரங்களாவன:

திடீரென ஒரு விவசாயி, தன் நிலத்தில் இயற்கை விவசாயம் செய்ய முடியாது; கொஞ்சம், கொஞ்சமாகத் தான் செயல்படுத்த முடியும்இந்த சாகுபடிக்கு, அங்கக சான்றிதழ் பெற வேண்டும்; அதை உடனடியாக பெற முடியாது

விவசாயிகள் மூன்று ஆண்டுகள் இயற்கை விவசாயம் செய்த பின், நான்காம் ஆண்டு அதற்கான சான்றிதழ் பெற முடியும். அப்படி உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விலை மதிப்பு கூடும்இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கான செயல்திட்டங்கள், தமிழகத்தில் சேலம், தர்மபுரி, நாமக்கல், திருப்பூர், தேனி, விருதுநகர், துாத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய, பத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளதுமுதலில் அந்த பகுதிகளில் திணை, சாமை, வரகு ஆகிய தானியங்கள் பயிரிடலாம். அதன் பின், படிப்படியாக மற்ற தானியங்களை பயிர் செய்யலாம்.

இவ்வாறு அந்த கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது. இந்த கூட்டத்தில், இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீத்தாராமன் நன்றி கூறினார்.

## கோத்தகிரியில் பரவலான மழை மரநாற்று வழங்கினால் பயன்

கோத்தகிரி: தேயிலை தோட்டங்களில் நடவு செய்ய சில்வர் ஓக் மற்றும் பழ மரங்கள் மானிய விலையில் வழங்கவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

நீலகிரியில், பெரும்பாலான நிலப்பரப்பில், தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக,கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக, கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில், பரவலாக மழைப் பெய்துவருவதால், நிலம் ஈரம் கண்டுள்ளது. இதனால், தோட்டங்களில் இடைநடவு செய்வதற்கும் சில்வர் ஓக் மற்றும் பழ மரங்கள் நடுவதற்கு உகந்த கால நிலை நிலவுகிறது.

எனவே, பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள விவசாயிகளின் நலன்கருதி, தோட்டக்கலைத்துறை மற்றும் வனத்துறை மூலம், மானிய விலையில் சில்வர் ஓக் மற்றும் பழ மரங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ரூ.1.5 கோடி மதிப்பில் மஞ்சள் ஏலக்கூடம்: செம்மாம்பாளையத்தில் அமைக்க ஏற்பாடு

ஈரோடு: செம்மாம்பாளையத்தில், ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பில், மஞ்சள் ஏலக்கூடம் கட்டுவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரோட்டில், ஈரோடு மற்றும் கோபி சொசைட்டி, பெருந்துறையில் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடம், செம்மாம்பாளையத்தில் மஞ்சள் வியாபாரிகள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்க விற்பனை கூட வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நான்கு இடங்களில் ஏலம் நடப்பதால், ஒரே நேரத்தில் வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்க முடியாத சிரமம் உள்ளது. இதனால் விலையில் பெரிய அளவில் தொய்வு ஏற்படுகிறது.

இதுபற்றி, ஈரோடு மாவட்ட விற்பனைக்குழு செயலாளர் குழந்தைவேலு கூறியதாவது: நான்கு இடங்களில் நடக்கும் ஏலத்தை, ஒரே இடத்துக்கு மாற்றுவது தற்போது சாத்தியமில்லை. பெருந்துறையில் காலை, 10 மணிக்கும், செம்மாம்பாளையத்தில், 11 மணிக்கும், ஈரோடு சொசைட்டியில், 12 மணிக்கும், கோபி சொசைட்டியில், 1 மணிக்கும் ஏலம் நடக்கிறது. எனவே, ஒரு ஏலத்தில் பங்கேற்ற விவசாயி மற்றும் வியாபாரிகள் வேறு ஏலத்தில் பங்கேற்க வாய்ப்பாகிறது. செம்மாம்பாளையத்தில், அச்சங்கத்துக்கு சொந்தமான ஏலக்கூடத்தில் மின்னணு ஏலம் மூலம் எஸ்.எம்.எஸ்.,சில் விலையை அனுப்பி, மஞ்சளை கொள்முதல் செய்கின்றனர். தற்போது, அச்சங்கம் மூலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு வழங்கிய இடத்தில், 1.5 கோடி ரூபாய் மதிப்பில் தனி ஏலக்கூடம் மற்றும் அலுவலகம் அமைக்க உள்ளோம். அங்கு ஏலம் துவங்கியதும், உறுப்பினர், உறுப்பினர் அல்லாத விவசாயிகள்,

வியாபாரிகள் என அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம். தற்போது நடத்தப்படும் மின்னணு முறையே அங்கும் பின்பற்றப்படும். இங்கு ஏலம் நடத்தும்போது, 15 நாட்களுக்கு மஞ்சள் மூட்டைகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படும். மேலும், ஏலக்கூடத்துக்கு தேவையான பிற வசதிகள் படிப்படியாக ஏற்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## சத்தியில் கொட்டியது மழை: வன ஓடைகளில் வெள்ளம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் கோடை மழை அவ்வப்போது பெய்து வருகிறது. இந்நிலையில் கடந்த சில தினங்களாக பெய்யவில்லை. இதனால் வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இந்நிலையில் நேற்று மாலை, 5 மணி அளவில் கனமழை பெய்ய தொடங்கியது. ஒரு மணி நேரம் கொட்டிய மழையால், சாலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழையால் வயல் வெளிகளிலும், வன ஓடைகளிலும் தண்ணீர் தேங்கியது. கனமழை நின்ற பிறகும், சாரல் மழை தொடர்ந்தது. இதனால் வெயிலின் தாக்கம் மறைய, இதமான சூழல் ஏற்பட்டது. ஆந்திராவில் இறந்த, சத்தியமங்கலம் ஐ.பி.எஸ்., அதிகாரி சசிகுமார் உடல் வரும் வரை கொட்டிய மழை, உடல் வந்து சேர்ந்தபின் குறைய தொடங்கியது. இறுதி ஊர்வலத்தின் போதும், தூறல் மழை தொடர்ந்தது. இதை பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள், நனைந்த படியே கலந்து கொண்டனர்.

## கறவை மாடு வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி

ஈரோடு: ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் உள்ள, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், வரும், 21, 22ம் தேதி, கறவை மாடு வளர்ப்பு இலவச பயிற்சி நடக்கிறது. விரிவான பாடங்கள், கலந்துரையாடல், வீடியோ படக்காட்சி, கேள்வி - பதில் பகுதிகளும் இடம் பெறும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், நேரில் அல்லது தொலைபேசி எண், 0424-2291482 மூலம் தொடர்பு கொள்ளலாம். ஈரோடு மற்றும் சுற்றுப்புற மாவட்ட விவசாய

பண்ணையாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## வரத்து குறைந்ததால் பூக்கள் விலை உயர்வு மல்லிகை கிலோ ரூ.400

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியில் பூக்கள் வரத்து குறைந்ததால், விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி பகுதியில் திம்மரசநாயக்கனுார், டி.பொம்மிநாயக்கன்பட்டி, சித்தார்பட்டி, ராஜதானி, மஞ்சிநாயக்கன்பட்டி, சுந்தரர்ராஜபுரம், கதிர்நரசிங்கபுரம், தெப்பம்பட்டி, பாலக்கோம்பை உட்பட பல கிராமங்களில் மல்லிகை பூக்கள் சாகுபடி உள்ளது.

கடந்த சில மாதங்களாக கோடை வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் மல்லிகை பூக்கள் விளைச்சலில் பாதிப்பு இல்லை. விளைச்சல் அதிகம் இருந்ததால் மார்க்கெட்டில் விலை கிலோ ரூ.40 முதல் 80 வரை மட்டுமே இருந்தது.

விலை உயர்வு

இந்நிலையில் தற்போது இப்பகுதியில் வெயில் தாக்கம் குறைந்து, காற்றின் வேகம் அதிகரித்துள்ளது. இதனால் பூக்கள் வரத்து குறைந்துள்ளது. கடந்த இரு நாட்களாக ஆண்டிபட்டி பகுதியில் மல்லிகை பூக்கள் கிலோ ரூ. 400 வரையும், கனகாம்பரம் கிலோ ரூ.300 வரையும், செண்டு பூக்கள் கிலோ ரூ.70 முதல் 80 வரையும் விலை போகிறது. மற்ற பூக்கள் வரத்து இல்லை.

வியாபாரிகள் தெரிவித்ததாவது:

கோடை வெயில் மல்லிகை விளைச்சலுக்கு சாதகமான காலம் என்பதால் கடந்த சில மாதங்களாக ஆண்டிபட்டி பகுதியில் தினமும் 2 டன் அளவில்விளைச்சல் இருந்தது.

உள்ளூர் தேவைகள் போக மீதம் இருந்த பூக்கள் சென்ட் தயாரிப்புக்காக குறைந்த விலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது இப் பகுதியில் வீசும் பலமான காற்று பூக்கள் சாகுபடிக்கு ஏற்றதல்ல. விளைச்சல் குறைந்ததால் மார்க்கெட்டில் வரத்து குறைந்து, தேவை அதிகரித்துள்ளது. இதனால் மல்லிகை பூக்கள் விலை கடந்த மூன்று நாட்களில் கிலோ ரூ. 400 வரை உயர்ந்துள்ளது.

## திருமண சீசனால் முருங்கைக்காய்க்கு தட்டுப்பாடு: காய் ஒன்று ரூ.20க்கு விற்பனை

சேலம்: திருமண சீசன் களை கட்டி உள்ள நிலையில், ஏழைகளின் வயாக்ரா எனப்படும், முருங்கைக்காய்க்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, காய் ஒன்று நேற்று, 20 ரூபாய்க்கு விற்பனையானது.

தமிழகத்தில், ஆடி மாதம் பிறக்க உள்ள நிலையில், திருமண சீசன் உச்ச நிலையை அடைந்துள்ளது. அதே நேரத்தில், முருங்கைக்காயின் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. தமிழகத்தில் முருங்கைக்காய், அதிக அளவில் விளையும், ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோவில், முத்தூர், திண்டுக்கல்மாவட்டம் பழனி, ஒட்டன்சத்திரம், கரூர் மாவட்டம் அறவக்குறுச்சி ஆகிய பகுதிகளில் அறுவடை முடிவுக்கு வந்து விட்டது. அரியலூர் மாவட்டம் சுத்தமல்லியில் தான் தற்போது அறுவடை நடந்து வருகிறது. தமிழகத்தில் மட்டுமின்றி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி மாநிலங்களிலும், முருங்கைக்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், வெளிமாநில வியாபாரிகள், சுத்தமல்லியில் முகாமிட்டு, முருங்கைகாய்களை மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். இதனால், தமிழகத்தின் உழவர்சந்தைகள், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் முருங்கைக்காயின் வரத்து கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், விலை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. நேற்று கிலோ, 100 ரூபாய் முதல், 150 ரூபாய் வரையிலும், ஒரு முருங்கைக்காய், உழவர் சந்தையில், 10 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில், முருங்கைக்காயின் நீளம், பருமனை பொறுத்து, 15 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை விற்பனையானது.முருங்கைக்காய் விலை உயர்வு ஏற்பட்டு இருப்பது, சைவ பிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து, சேலம் பனமரத்துப்பட்டியை சேர்ந்த விவசாயி தங்கவேல் கூறியதாவது: முருங்கைக்காய்க்கு தற்போது சீசன் கிடையாது. இதனால், வெளி மாவட்ட காய்கள் விற்பனைக்கு வருவதை பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. உள்ளூரில் விளையும் நாட்டுக்காயின்

வரத்து முற்றிலும் நின்று விட்டது. அரியலூர் மாவட்டம் சுத்தமல்லியில் விளையும் கைபிரட் காய்தான் விற்பனைக்கு வந்து கொண்டு இருக்கிறது. அதன் வருகையும் எதிர்பார்த்த அளவு இல்லை. தற்போது திருமண சீசன் உச்சத்தில் இருப்பதால், முருங்கைக்காயின் விலை கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. இன்னும் இரண்டு வார காலம், முருங்கைக்காயின் விலை, மேலும் உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் பண்ணைக்குட்டை

ராமநாதபுரம்: விவசாயிகளுக்கு நுாறு சதவீதம் மானியத்தில் பண்ணைக்குட்டை அமைத்து தரப்படும், என விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் நடராஜன் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று காலை நடந்தது. கலெக்டர் நடராஜன் தலைமை வகித்தார். விவசாயிகளிடம் இருந்து ஏற்கனவே பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். 2015-16ம் ஆண்டில் அதிக மகசூல் பெற்ற விவசாயிகளை பாராட்டி கலெக்டர் நடராஜன் பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

ஆர்.எஸ்.மங்கலம் தாலுகா ஆவரேந்தல் கிராமத்தை சேர்ந்த காந்தி முதல் பரிசு பெற்றார். அவருக்கு ரூ.15 ஆயிரத்திற்கான காசோலையும், ராமநாதபுரம் களத்தாவூர் கிராமத்தை சேர்ந்த தமயந்தி என்பவருக்கு 2ம் பரிசாக ரூ.10 ஆயிரத்திற்கான காசோலையும் கலெக்டர் நடராஜன் வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:

விவசாயிகள் தங்கள் மண்ணை பரிசோதனை செய்து மண்வள அட்டையில் உள்ள பரிந்துரைப்படி உரமிட வேண்டும். கோடை உழவு செய்து நிலத்தை தயார் செய்ய வேண்டும். 100 சதவீதம் மானியத்தில் பண்ணைகுட்டை அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

நுாறு சதவீதம் மானியத்தில், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் உறைகிணறு அமைக்கப்பட்டு வருவதால் விருப்பம் உள்ள விவசாயிகள்

உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பயனடையலாம். இதே போல், பண்ணைக்குட்டையில் மீன்குஞ்சுகள் வளர்க்க விருப்பப்பட்டால், மீன்வள உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

விவசாயத்துறை இணை இயக்குனர்(பொறுப்பு) அரிவாசன், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) வெள்ளைச்சாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## கரும்பு தோகையை மக்க வைக்க செயல்முறை விளக்க பயிற்சி

மோகனூர்: மோகனூரில், கரும்பு தோகையை மக்க வைக்க தேவையான தொழில்நுட்ப முறை குறித்து, செயல் விளக்க கூட்டம் நடந்தது. மோகனூர் வட்டார வேளாண்துறை சார்பில், கரும்பு தோகையை மக்க வைக்க தேவையான புதிய உயிரியல் தொழில்நுட்ப முறை குறித்த செயல்விளக்கம் நடந்தது. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் பிரியா தலைமை வகித்தார். செயல் விளக்கத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சுற்றுசூழல்துறை பேராசிரியர் சுப்ரமணியம் செய்து காண்பித்தார். இது கிராயூர் விவசாயி சுப்ரமணி வயலில் செய்து காண்பிக்கப்பட்டது. இதில், கரும்பு வெட்டிய பிறகு தோகையை எரிப்பதால், சுற்றுச்சூழலுக்கு தீமை ஏற்படுகிறது. இதை தடுக்கவும், தோகையை மக்க வைத்து இயற்கை உரமாக்கி, மண்ணுக்கு அளிப்பதால், மண்ணின் வளம் அதிகரிக்கிறது. தோகையை மக்க வைக்க, 'பயோ மினரலைசர்' என்ற உயிரியல் காரணியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பவுடர் வடிவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பயோமினரலைசரை, ஒரு டன் தோகைக்கு, இரண்டு கிலோ வீதம், 20 லிட்டர் தண்ணீருடன் கலந்து, தோகை உரித்து, பாலிகளில் இட்டு, அதன்மேல் முழுவதும் படும்படி விசைத்தெளிப்பான் மூலம் சீராகத் தெளிக்க வேண்டும் என, தெரிவிக்கப்பட்டது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர்கள் லோகநாதபிரகாசம், சுப்பையா ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கிறுகிறுக்கும் விலைவாசி

லா ரி ஸ்டிரைக் அல்லது மழை காலம், இப்படி ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்படும் சமயத்தில் காய்கறி வரத்து குறைந்து விலை அதிகரிப்பது தான் வாடிக்கை. அதுவும் தக்காளி விலை கிலோ 20 ரூபாய்க்கு மேல் தாண்டினாலே ஆச்சரியமாக தான் பார்க்கப்படுவதுண்டு. இப்போது தக்காளி மட்டுமல்ல, உருளைக்கிழங்கு உள்பட பல காய்கறிகள் , பருப்பு விலை என எல்லாமே எகிறி சாப்பாடு பட்ஜெட் எகிறியதில் 'ஹோம் மேக்கர்களை' தலை சுற்ற வைக்கிறது. நாடு முழுவதும் பெரும்பாலான மக்களால் பேதமின்றி பயன்படுத்தப்படும் தக்காளி, உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு வகைகள் விலையேற்றம் தனி நபர் குடும்பங்கள் மட்டுமல்ல, நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தையும் பாதிக்கும் விஷயம் என்பது அரசுக்கு தெரியாத விஷயமல்ல. கடந்த 2014ல் கிலோ ரூ.72க்கு விற்பனை செய்யப்பட்ட துவரம் பருப்பு இப்போது கிலோ ரூ.142க்கு தான் கிடைக்கிறது.

உளுத்தம்பருப்பு கிலோ ரூ.84ல் இருந்து ரூ.172க்கு எகிறியுள்ளது. பருப்பு மட்டுமல்ல. காய்கறிகள் விலையும் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. பிரதமர் மோடியின் வாரணாசி தொகுதியில் உருளைக்கிழங்கு விலை கடந்த இரண்டு ஆண்டுகளில் 122 சதவீதமும், ஜெயப்பூரில் 156 சதவீதமும், தலைநகர் டெல்லியில் 100 சதவீதமும் விலையேற்றம் கண்டுள்ளது. தக்காளி விலையும் தொடர்ந்து ஏற்றம் கண்டுள்ளது. தக்காளி விலை பல்வேறு முக்கிய நகரங்களில் கடந்த 3 மாதங்களில் 100 சதவீதம் முதல் 200 சதவீதம் வரை விலையேற்றம் கண்டுள்ளது. 3 மாதத்திற்கு முன்பு தக்காளி விலை கிலோ 10 ரூபாய்க்கு சில்லரை விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. இப்போது 10 மடங்கு உயர்ந்துள்ளது. சென்னை மட்டுமின்றி, கொல்கத்தா, மும்பை, டெல்லி என பல இடங்களிலும் தக்காளி விலை உயர்வு கடும் பாதிப்பை

ஏற்படுத்தியுள்ளது. மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்த கணக்கின் படி 2015-16ம் ஆண்டில் தக்காளி உற்பத்தி 18.2 மில்லியன் டன். முந்தைய ஆண்டில் 16.4 மெட்ரிக் டன் மட்டுமே.

மழை, உற்பத்தி சரிவு என விலை உயர்வுக்கு சால்ஜாப்பு சொல்லமுடியாது. பதுக்கல், இடைத்தரகர்கள் தலையீடு, அரசின் கொள்கைகள் தான் உணவுப்பொருட்கள் விலைவாசி ஏற்றத்திற்கு முக்கிய காரணம் என்பதை மறுத்து விடமுடியாது. விவசாயிகள் நலன், வேளாண் பொருள் உற்பத்தி குறித்து பிரதமர் மோடி கடந்த இரண்டு ஆண்டுகளில் பலமுறை பேசி விட்டார். ஆனாலும் இரண்டு ஆண்டுகளில் தான் உணவு பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது என்பது கவனிக்கப்படவேண்டிய விஷயம். ஆனால் இதன் பலன் ஏதும் உணவு பொருளை உற்பத்தி செய்யும் விவசாயிக்கு போய் சேரவில்லை. ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஊக்குவிப்பு, மேக் இன் இண்டியா திட்டங்கள் மட்டுமே நாட்டின் வளர்ச்சி சார்ந்தவை அல்ல. பசியை போக்குவது தான் அரசின் முதல் கடமை. அதற்கு உணவு பொருட்கள் விலையை கட்டுக்குள் வைப்பதில் மோடி அரசின் கவனம் திரும்பவேண்டும்.

**சளி பிரச்னையை தீர்க்கும் தூதுவளை**




அலர்ஜியால் திடீரென சளி பிடிக்கும். நாள்பட்ட சளியானது காசநோயாக மாறும். காய்ச்சலை உண்டாக்கும். அதிக சளியால் மூச்சு திணறல்

உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படும். தூதுவளையை பயன்படுத்தி சளி பிரச்னையை தீர்க்கும் மருந்து தயாரிக்கலாம். 10 தூதுவளை இலைகளை எடுக்கவும். இதனுடன், சிறிது முசுமுசுக்கை இலை, பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர சளி, இருமல் இல்லாமல் போகும்.

சளி பிரச்னைக்கு தூதுவளை மருந்தாகிறது. இது, உஷ்ணத்தை கொடுக்க கூடியது. உடலுக்கு பலத்தை தருகிறது. முசுமுசுக்கை சளியை போக்குகிறது. ஆயுளை அதிகரிக்கும் தன்மை கொண்டது. தூதுவளை, முசுமுசுக்கை பொடி நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். வெள்ளெருக்கம் பூவை பயன்படுத்தி ஆஸ்துமா பிரச்னை உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளும் மருந்து தயாரிக்கலாம்.

வெள்ளெருக்கம் பூவின் இதழ்களை நீர்விடாமல் பசையாக அரைத்து எடுக்கவும். இதனுடன் மிளகுப்பொடி சேர்க்கவும். 4 பங்கு பூவுக்கு ஒரு பங்கு மிளகு என்ற அளவில் எடுக்கவும். இதை நன்றாக கலந்து சுண்டைக்காய் அளவில் உருண்டைகளாக பிடிக்கவும். இது காய்ந்தவுடன் மிளகு அளவுக்கு கிடைக்கும். அன்றாடம் இருவேளை மிளகு அளவுக்கு சாப்பிடும்போது ஆஸ்மா சரியாகும். ஆஸ்துமாவுக்கு மிகவும் பாதுகாப்பான மருந்தாக வெள்ளெருக்கம் பூ விளங்குகிறது. ஒரு வெள்ளெருக்கம் பூவுடன் 5 மிளகு சேர்த்து மென்று சாப்பிட்டால் ஆஸ்மா பிரச்னை தீரும்.

கடுகை பயன்படுத்தி வறட்டு இருமலுக்கான தேனீர் தயாரிக்கலாம். கால் ஸ்பூன் கடுகு எடுத்து லேசாக வறுக்கவும். இதை இடித்து எடுக்கவும். இந்த பொடியில் ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். வடிகட்டி தேன் சேர்த்து குடிப்பதால் சளி, காய்ச்சல், இருமல், உடல் வலி, கண்களில் நீர் வழிதல் போன்ற பிரச்னைகள் இல்லாமல் போகும். இந்த தேனீரை 50 முதல் 100 மில்லி வரை குடிக்கலாம்.

இருமலுக்கு கடுகு உன்னதமான மருந்தாகிறது. பல்வேறு நன்மைகளை

கொண்ட கடுகு காரம் மிக்கது, உடலுக்கு உஷ்ணத்தை தரக்கூடியது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்கிறது. காய்ச்சலை தணிப்பதுடன் வலியை குறைக்கும். வீக்கத்தை கரைக்கிறது. எளிதில் கிடைக்கூடிய விளக்கெண்ணெய்யை பயன்படுத்தி வயிற்று வலியை போக்கும் முறையை பார்க்கலாம். வீட்டில் இருக்கும் சமயத்தில் திடீரென வயிற்று வலி ஏற்பட்டால், சுமார் 6 சொட்டு அளவுக்கு விளக்கெண்ணெய் எடுத்து, தொப்புளை சுற்றி போடவும். இவ்வாறு செய்தால் சிறிது நேரத்தில் வயிற்று வலி இல்லாமல் போகும்.

**உடல் எடையை குறைக்கும் கல்யாண முருங்கை**




பெண்களுக்கு உடல் எடை கூடுதல், குறைதல் பிரச்னை ஏற்படும். தைராய்டு சுரப்பி சரியாக வேலை செய்யாதது, சர்க்கரை நோய், உடல் உழைப்பு இல்லாதது, வீட்டு வேலைக்கு இயந்திரங்களை பயன்படுத்துவது, மன அழுத்தம், சரியான நேரத்துக்கு சாப்பிடாதது போன்றவை உடல் எடை கூடுவதற்கு காரணமாக அமைகிறது. உடல் எடை குறைப்புக்கான கொள்ளு தேனீர் தயாரிக்கலாம்.

கொள்ளை வறுத்து பொடியாக்கி கொள்ளவும். 2 துண்டுகள் கொடம்புளியை ஊற வைக்கவும். இந்த தண்ணீரில் ஒரு ஸ்பூன் கொள்ளுபொடி சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை

வடிக்கட்டி தினமும் காலையில் வெறும் வயிற்றில் 100 மில்லி குடித்துவந்தால் உடல் எடை குறையும். இதை குடிக்கும்போது அசிடிட்டி பிரச்னை வரலாம். இதனை தவிர்க்க சாப்பாட்டுக்கு பின்னர் மோர் குடிக்கலாம்.

கொடம்புளி பசியை அடக்கி உடல் எடையை குறைக்க உதவுகிறது. கொள்ளு உடலுக்கு உஷ்ணத்தை கொடுத்து கழிவுகளை வெளியேற்றும். உடல் எடையை குறைக்கும். கல்யாண முருங்கை இலையை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். 4 கல்யாண முருங்கை இலைகளை துண்டுகளாக்கி எடுக்கவும். இதனுடன் 10 மிளகு தட்டி போடவும். ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு நன்றாக கொதிக்க வைக்கவும்.

வடிக்கட்டி காலையில் வெறும் வயிற்றில் 100 மில்லி அளவுக்கு குடித்துவர தேவையற்ற கொழுப்பு கரைந்து வெளியேறும். அடிக்கடி எடுத்துக்கொள்வதால் உடல் எடை குறையும். கல்யாண முருங்கை செடியில் முள் இருக்கும். பூவசரம் இலையை போன்று காணப்படும். சிவந்த பூக்களை பெற்றிருக்கும். இது அழகுக்காக வளர்க்கப்படும் மரம். இதன் இலைகள் உணவாக பயன்படுகிறது.

மூட்டுவலியை குணப்படுத்தும். உஷ்ணமான தன்மை உடையதால் சளியை போக்கும்.இதை பயன்படுத்தி உடல் எடையை அதிகரிக்கும் உணவு தயாரிக்கலாம். உளுந்தம் பருப்பை வறுத்து ஏலக்காய் சேர்த்து பொடி செய்து, இதிலிருந்து ஒரு ஸ்பூன் எடுத்துக்கொள்ளவும். முந்திரி, பிஸ்தா, பாதம் ஆகியவற்றை பொடி செய்து வைத்துக்கொள்ளவும். இதிலிருந்து ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இவைகளை தண்ணீர் விட்டு நன்றாக கலக்கவும்.

ஒரு பாத்திரத்தில் சிறிது நீர்விட்டு நாட்டு சர்க்கரை சேர்த்து கொதிக்க வைக்கவும். இதனுடன் அரை ஸ்பூன் நெய் சேர்க்கவும். ஏற்கனவே கலந்து

வைத்திருக்கும் கலவையை இதனுடன் சேர்க்கவும். நன்றாக வெந்தவுடன் காய்ச்சிய பால் ஊற்றவும். காலை உணவு சாப்பிடபின் இதில் ஒரு டம்ளர் குடித்துவர எடை கூடும். காலையில் வெறும் வயிற்றில் ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய் சாப்பிட்டு வர உடல் எடை கூடும்.

## சிறுநீரக கற்களை கரைக்கும் நெறிஞ்சில்




ஈரலை பலப்படுத்த கூடியதும், வெள்ளைப்போக்கு பிரச்னையை தீர்க்கவல்லதும், உயிரணுக்களை அதிகரிக்க செய்வதும், சிறுநீரக கற்களை கரைக்கும் தன்மை கொண்டதுமான நெறிஞ்சில் தரையோடு படர்ந்து காணப்படும் செடி நெறிஞ்சில். இதன் பூக்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். முட்கள் சிறிதாக இருக்கும்.

சிறு நெறிஞ்சில், பெரு நெறிஞ்சில், யானை நெறிஞ்சில் என 3 வகைப்படும். இவைகள் அனைத்தும் ஒரே மருத்துவ குணங்களை கொண்டவை. சிறுநீரகம், பித்தபையில் கற்கள் ஏற்படுவதால் வலி ஏற்படுகிறது. இதுபோன்ற பிரச்னைகளுக்கு நெறிஞ்சில் மருந்தாக விளங்குகிறது. நெறிஞ்சில் உள் உறுப்புகளுக்கு பலம் தருகிறது. அழற்சியை போக்க கூடியது.

ஈரலை பலப்படுத்தும் தன்மை கொண்டது. நெறிஞ்சில் முள்ளை பயன்படுத்தி சிறுநீரக கற்கள், பித்தப்பை கற்களை கரைக்கும் மருந்து தயாரிக்கலாம். சிறு நெறிஞ்சில் செடியை துண்டுகளாக்கி சுத்தப்படுத்தி எடுத்து கொள்ளவும். இதனுடன் சிறிது வெட்டி வேர், அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி குடித்துவர சிறுநீரக, பித்தப்பை கற்கள் கரைந்து வெளியேறும். கற்கள் வராமல் தடுக்கும். சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல் சரியாகும். வெள்ளைப்போக்கு பிரச்னை குணமாகும்.

நெறிஞ்சில் செடியின் பொடி மற்றும் நெறிஞ்சில் முள் ஆகியவை நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். நெறிஞ்சில் முள்ளை பயன்படுத்தி ஆண் மலட்டு தன்மையை போக்கும் மருந்து தயாரிக்கலாம். அரை ஸ்பூன் நெறிஞ்சில் முள் பொடியுடன் அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். பின்னர், வடிகட்டி காய்ச்சிய பால் சேர்த்து குடிக்கவும்.

இது, ஆண்களுக்கு ஏற்படும் உயிரணு குறைபாட்டை நீக்குகிறது. உயிரணு குறைபாடுள்ளவர்கள் 3 மாதம் தொடர்ந்து எடுத்துவர உயிரணு அதிகரிக்கும். உடலுக்கு குளிர்ச்சி தருகிறது. உடலுக்கு பலம் கொடுக்கிறது. நெறிஞ்சிலை பயன்படுத்தி வெள்ளைபோக்கு பிரச்னையை தீர்க்கும் மருந்து தயாரிக்கலாம். நெறிஞ்சிலை பசையாக அரைத்து, அரை ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும்.

இதனுடன் புளிப்பில்லாத கெட்டித் தயிர் 2 ஸ்பூன் சேர்த்து கலந்து காலையில் சாப்பிட்டுவர வெள்ளைப்போக்கு சரியாகும். சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல் குணமாகும். உஷ்ணம் சம்மந்தமான பிரச்னைகள் சரியாகும்.உடல் சோர்வை போக்குவதற்கான மருந்து குறித்து பார்க்கலாம். அரை தேக்கரண்டி அளவுக்கு வெந்தயத்தை எடுத்து வறுத்து பொடித்து கொள்ளவும். இதனுடன் தேன் அல்லது பால், இனிப்பு சேர்த்து சாப்பிடும்போது உடல் பலம் பெறுகிறது. இதனால் சோர்வு மறைந்து புத்துணர்வு கிடைக்கிறது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### வால்பாறையில் பச்சை தேயிலை மகசூல் அதிகரிப்பு



வால்பாறை,

வால்பாறையில் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.

தேயிலை

வால்பாறை வட்டார பகுதிகளில் 12 ஆயிரத்து 978 ஹெக்டர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. தேயிலை செடிகளுக்கு வெயிலும், மழையும் மாறி, மாறி வந்தால் மகசூல் அதிகரிக்கும். இதனிடையே இந்த பகுதியில் கடந்த மார்ச் மாதம் இறுதி முதல் ஏப்ரல் மாதம் வரை கடுமையான வெப்பம் நிலவி வந்ததால் பச்சை தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டு வந்தது.

இதனால் டீத்தூள் உற்பத்தியின் அளவும் குறைந்து போனது. மேலும் வெளிமார்க்கெட்டிற்கு வரும் டீத்தூளின் அளவும் குறைந்ததால் டீத்தூளின் விலையும் அதிகரித்து வந்தது.

<u>மகசூல் அதிகரிப்பு</u>

தற்போது வால்பாறை பகுதியில் அவ்வப்போது மழையும், பெரும்பாலான நேரங்களில் நல்ல வெயிலும் அடித்து வருகிறது. இந்த கால சூழ்நிலை தேயிலைக்கு உகந்த கால சூழ்நிலையாக இருப்பதால் வால்பாறை வட்டார பகுதிகளில் உள்ள அனைத்து தேயிலை தோட்டங்களிலும் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.

<u>கவாத்து</u>

தென்மேற்கு பருவமழையை எதிர்நோக்கி பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் கவாத்து செய்யப்பட்டிருந்த தேயிலை தோட்டங்களிலும் கொழுந்து இலைகள் துளிர்விட்டு வளரத் தொடங்கி உள்ளன. இதனால் அனைத்து எஸ்டேட் பகுதிகளிலும் பச்சை தேயிலை இலை பறிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்றுவருகிறது.

தற்போது பறிக்கப்படும் தேயிலை இலைகள் தொழிற்சாலைகளுக்கு கொண்டு சென்று டீத்தூளாக தயாரிக்கப்பட்டு பின்னர் ஏல மையங்களுக்கு சென்று விற்பனைக்கு அனுப்பப்படும். விற்பனை அதிகமாக வரும்பட்சத்தில் டீத்தூள் விலை குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். தற்போது வால்பாறை பகுதியில் ஒரு கிலோ டீத்தூளின் குறைந்த பட்சவிலை ரூ.90–க்கும் அதிகபட்சமாக ரூ.210–க்கும் விற்கப்படுகிறது.

## பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் ரூ.6 கோடியில் 198 கடைகள் கட்டும் பணி மும்முரம்



பொள்ளாச்சி

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் ரூ.6 கோடியில் 198 கடைகள் கட்டும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை ஆகஸ்டு மாதத்துக்குள் முடிக்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

<u>காந்தி மார்க்கெட்</u>

பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட்டில் 130 சில்லறை காய்கறி வியாபார கடைகளும், 68 மொத்த காய்கறி வியாபார கடைகளும் சேர்த்து மொத்தம் 198 கடைகள் உள்ளன. இந்த மார்க்கெட்டுக்கு பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இதை தவிர வெளி மாவட்டங்களில் இருந்தும் காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன.

இங்கிருந்து பெரும்பாலும் கேரளாவுக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதை தவிர பொதுமக்களும் காய்கறிகளை வாங்கி செல்கின்றனர். மார்க்கெட்டில் உள்ள கடைகள் கட்டி பல ஆண்டுகள்

ஆகிவிட்டதால், கட்டிடத்தின் மேல் பகுதியில் செடிகள் மற்றும் மரங்கள் முளைத்து விட்டன. இதனால் கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. மேலும் எப்போது வேண்டுமானாலும் இடியும் அபாயத்தில் காணப்பட்டன.

<u>ரூ.6 கோடி</u>

இதையடுத்து புதிதாக கடைகள் கட்டி கொடுக்க வேண்டும் என்ற வியாபாரிகளின் கோரிக்கையை ஏற்று, புதிதாக கடைகள் கட்டி கொடுக்க நகராட்சி நிர்வாகம் முடிவு செய்தது. இதற்கிடையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பழைய கட்டிங்கள் இடிக்கப்பட்டன. இதையடுத்து அந்த பகுதியில் தற்காலிகமாக கடைகள் அமைத்து சில்லறை வியாபாரிகள் கடைகள் அமைத்து வியாபாரம் செய்ய வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது.

மொத்த வியாபாரிகளுக்கு அதே பகுதியில் மற்றொரு இடம் ஒதுக்கப்பட்டு உள்ளது. அதை தொடர்ந்து பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் சில்லறை மற்றும் மொத்த வியாபார கடைகள் கட்ட டுபிட்கோ உட்கட்டமைப்பு திட்டத்தின் மூலம் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

<u>காய்கறி கழிவுகள்</u>

இதுகுறித்து நகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:–

வியாபாரிகளின் கோரிக்கையை ஏற்று, பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் 198 கடைகள் ரூ.6 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. புதிதாக கடைகள் கட்டப்படும் இடத்தில் ஆக்கிரமிப்புகளை தடுக்க ஒரு புறமும் மட்டும் கடைகள் கட்டப்பட உள்ளது. மேலும் காய்கறி கழிவுகளை கடைகளின் முன் கொட்டுவதை தடுக்க ஒவ்வொரு கடையின் பின்புறமும், சுழல் கதவுகள் அமைக்கப்படுகிறது.

வியாபாரிகள் கழிவுகளை அந்த கதவை திறந்து, பின்புறம் கொட்ட வேண்டும். கழிவுகளை சேகரிக்க தனி பாதை அமைக்கபட உள்ளது. இந்த பாதை வழியாக பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். கழிவுகள் மூலம் இயற்கை எரிவாயு தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

<u>ஆகஸ்டு மாதம் முடிக்க திட்டம்</u>

மேலும் மார்க்கெட்டுக்கு வரும் பொதுமக்கள், தொழிலாளர்கள் ஓய்வு எடுக்க வசதியாக ஓய்வறையும் கட்டப்படுகிறது. சில்லறை கடைகளுக்கு செல்ல 40 அடி நீளத்தில் வழி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் காய்கறிகள் ஏற்றி வரும் லாரிகள் எந்தவித சிரமும் இல்லாமல் செல்ல வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இதை தவிர இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம், ஆண்கள், பெண்களுக்கு தனி, தனி கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

தற்போது கடைகள் கட்டும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. சில்லறை வியாபார கடைகள் கட்டும் பணி 70 சதவீதமும், மொத்த வியாபார கடைகள் கட்டும் பணி 40 சதவீதமும் நிறைவடைந்து உள்ளன. வருகிற ஆகஸ்டு மாதத்துக்குள் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## குமரி மாவட்டத்தில் அணை பகுதியில் நடைபெற்று வரும் பணிகள் கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், குமரி மாவட்டத்தில் அணை பகுதியில் நடைபெற்று வரும் பணிகளை கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர்

குமரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை (நீர் ஆதார அமைப்பு) மூலம் நடைபெற்று வரும் பணிகளை நேற்று கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன்படி குழித்துறை ஆற்று புனரமைப்பு பணி திட்டத்தின் கீழ், ரூ.6.35 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் சப்பாத்து பாலம் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது பணிகளின் விவரம் குறித்து கேட்டறிந்தார். இதற்கு பதிலளித்து பொதுப்பணித்துறை அலுவலர்கள் கூறுகையில், இப்பாலமானது 100 மீட்டர் தூரத்துக்கு அமைக்கப்படவுள்ளது. தற்போது 78 மீட்டர் கட்டப்பட்டுள்ளதாகவும், இதன் உயரம் தரைமட்டத்திலிருந்து 3.2 மீட்டர் அளவிலும், 4.8 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது என்றும்

தெரிவித்தனர். பின்னர் இப்பணியினை விரைவில் முடித்திட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் உத்தரவிட்டார்.

அணை பகுதியில் ஆய்வு

அதனை தொடர்ந்து சிற்றார்-2 அணைக்கு நேரடியாக சென்று, அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.3.85 கோடி செலவிலும், சிற்றார்-1 அணையில் ரூ.2.27 கோடி செலவிலும், பெருஞ்சாணி அணையில் ரூ.7.64 கோடி செலவிலும் நடைபெற்று வரும் அணைக்கு செல்லும் பழுதான சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், காவலர் தங்குவதற்கு தனியாக கட்டிடம் கட்டும் பணிகளும், பழுதான படிக்கட்டுகளை சரி செய்யும் பணிகளையும், அணையின் வெளிப்புறம் சங்கிலி வேலி அமைக்கும் பணிகளையும், அடித்தள ஆய்வுக்கூடத்தில் பராமரிப்பு பணிகளும், ஆற்று மதகுகள் சரி செய்யும் பணிகளும், அவசர கால மதகுகள் சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

24 மணி நேரம் கண்காணிப்பு

குமரி மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இதனை 24 மணி நேரமும் கண்காணிக்க பொதுப்பணித்துறை அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் அணைக்கு வரும் தண்ணீர் அளவு மற்றும் வெளியேற்றும் அளவு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக அணைகளுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையிலும், அதே நேரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் இருக்க மாவட்ட நிர்வாகம் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்பாடு பணிகளும் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

ஆய்வின் போது செயற்பொறியாளர் சுப்பிரமணியன், உதவி செயற்பொறியளர்கள் ராஜகோபால், உதவி பொறியாளர்கள் மெல்கின்

சத்தீக், மோகன்தாஸ், இளநிலை பொறியாளர் மைக்கேல் ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை கடந்த ஒரு மாதமாக 5,500 வாகனங்களில் கிருமி நாசினி தெளிப்பு அதிகாரிகள் தகவல்**



களியக்காவிளையில் பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக கடந்த ஒரு மாதமாக வெளியூர்களில் இருந்து வந்த 5,500 வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பறவை காய்ச்சல்

கர்நாடக மாநிலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பறவை காய்ச்சல் பரவியது. இதனால், ஏராளமான கோழிகள் இறந்தன. மேலும், ஆயிரக்கணக்கான கோழி முட்டைகள் அழிக்கப்பட்டன. இதனால், அங்கிருந்து பிற மாநிலங்களுக்கு கோழி மற்றும் முட்டைகள் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதைத்தொடர்ந்து, குமரி-கேரளா எல்லை பகுதியான களியக்காவிளை சோதனை சாவடியில் சிறப்பு முகாம் அமைக்கப்பட்டு பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கேரளா போன்ற வெளி மாநிலங்களில் இருந்து வரும் லாரி, டெம்போ போன்ற வாகனங்களின் டயர்களில் குளோரின் டை ஆக்சைடு என்ற கிருமி நாசினி தெளித்து மாவட்டத்தின் உள்ளே அனுமதிக்கப்பட்டு வருகிறது.

கிருமி நாசினி தெளிப்பு

இந்த பணியில் கால்நடை மருத்துவர்கள் டானி பிரிதா, சந்திரகுமாரி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் பிரதிஷ், உதவியாளர் கிருஷ்ணன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். இந்த பணி இரவு, பகலாக நடந்து வருகிறது. இதில், கடந்த ஒரு மாதமாக 5,500 வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மக்காச்சோளம் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி



நொய்யல்,

மக்காச்சோளம் விலை உயர்வின் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மக்காச்சோளம்

கரூர் மாவட்டம், நொய்யல், மரவாப்பாளையம், குளத்துப்பாளையம், வேட்டமங்கலம், கவுண்டன்புதூர், ஓரம்புப்பாளையம், புங்கோடை, நல்லிக்கோவில் உள்பட பல்வேறு பகுதிகளில் மக்காச் சோளத்தை தனியாகவும், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களில் ஊடு பயிராகவும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

விளைந்த மக்காச் சோளக்கதிர்களை பறித்து எந்திரத்தின் மூலம் மக்காச்சோளத்தை பிரித்தெடுக்கின்றனர். பின்னர் சாக்குகளில் போட்டு கட்டி வைக்கின்றனர். விவசாயிகள் மக்காச்சோளங்களை உள்ளூர் பகுதிகளுக்கு வரும் வியாபாரிகளிடமும், அருகாமையில் உள்ள சாலைப்புதூரில் செயல்பட்டு வரும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொண்டுசென்று ஏலத்தின் மூலம் விற்பனை செய்கின்றனர். மேலும் உள்ளூர் பகுதிகளுக்கு வரும் வியாபாரிகளிடமும் விற்பனை செய்கின்றனர்.

விலை உயர்வு

மேலும் கோழித்தீவனம், மாட்டுத்தீவனம் தயாரிப்பாளர்கள் புரோக்கர்கள் மூலம் வாங்கிச் செல்கின்றனர். மக்காச் சோளத்தை வாங்கும் புரோக்கர்கள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பிவைக்கின்றனர்.

மாவு தயார் செய்யும் மில் நிர்வாகத்தினரும் வாங்கி சென்று மக்காச் சோளமாவு தயார் செய்கின்றனர். பாப்கான் தயாரிப்போரும் வாங்கி செல்கின்றனர்.

கடந்த வாரத்தில் மக்காச் சோளம் ஒரு டன் ரூ.14 ஆயிரம் விற்பனையானது. இந்த வாரம் மக்காச்சோளம் ஒரு டன் ரூ.17 ஆயிரம் விற்பனையானது. உற்பத்தி குறைவின் காரணமாக மக்காச் சோளம் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.